1414

Regd. No. M. 878

5-MAR 1924

பூர்ணசந்திரோதயம்.

A Tamil Monthly Journal

Devoted to Theosophy, Religion, Science, Art and Civilization.

1918-௵ மேமீ

தொகுதி [illegible] காளயுக்தி௵ வைகாசிமீ பகுதி 1.

அ. ரங்கசாமி ஐயர், B. A., B. L., பத்திராதிபர்

தபால் சார்ஜ் உள்பட வருஷ சந்தா இந்தியாவுக்கு ரூ. 2.

அன்னிய நாடுகளுக்கு ரூ. 2—8—0 தனிப்பிரதி அணா 4

தபால் சார்ஜ் வேறு

மதுரை

விக்டோரியா அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy-right Reserved.

விஷய அட்டவணை.
(CONTENTS.)

1. முக்கிய அறிவிப்பு—பத்திராதிபர் 1
Notice—Editor.

2. தற்காலநிலைமை.—ஆர். ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ. 2
Current Events—R. Rangaswami Iyer, B. A.

3. நல்ல சமயம்—ஆத்மநாதய்யர் 9
An oppurtunity—Atmanathier

4. பத்திரிகை விமர்சம்—Review of Journals

5. மனு ஸ்மிருதியின் ஆதாரம்—பி. எஸ். ராமசுப்பையர் 14
The Basis of Manusmriti—B. S. Ramasubbier

6. தேசியக்கல்விச் சிறப்பு—வே. முத்துசாமி ஐயர் எம். ஏ., எல். டி. 22
Verses on National Education—V Muthusami Iyer, M. A., L. T.,

7. பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)—வி. வெங்குசாமி ஐயர் 27
Elements of Theosophy—V. Venkusami Iyer

8. புத்தக விமர்சம்.—Review of Books 29

9. ஜீவகாருண்யம்—இராமாணந்தயோகி 30
Mercy—Ramananda yogi

அணு 6 விலை] மீனாட்சி சுந்தரம் [தபால் கூலி வேறு

ஒரு இனிய நவீன நாடகம். பிராமணகுடும்ப சம்பவங்களை மிக அழகாய் நாடகரூபத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆக்கியோர் கி. வெங்கடராமையர். மிகவும் அழகாய் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது.

ஒருசமயம் 6 அல்லது அதிகப் பிரதிகள் வாங்குவோர்க்கு 100க்கு 15 கமிஷன் கொடுக்கப்படும்.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்.
மதுரை.

விக்கிரஹாராதனை—ஒரு சம்பாஷணை கே. எஸ். ராமசந்திரையர் விலை 0—1—0. பூர்ணசந்திரோதயம் சந்தாதாரர்களுக்கு 0—0—9. மாணவர்களுக்கு விக்கிரஹாராதனையின் உண்மையைப் புகட்டவல்லது. கிறிஸ்தவப்பாதிரிமார்களின் தூஷணைகளை கண்டிக்க உபயோகமுள்ளது.

பூர்ணசந்திரோதயம் ஆபீஸ்,
மதுரை.

பூர்ணசந்திரோதயம்.

1918-௵ மே௴

தொகுதி 9 — காளயுக்தி௵ வைகாசி௴ — பகுதி 1.

முக்கிய அறிவிப்பு.

எமக்கு எழுதுவோர் தங்கள் பேருக்கு முன்பாக ராப்பரில் குறிக்கப்பட்ட நிம்பரைக்காட்டி எழுதுங்கள். அப்படிச் செய்தால் தான் பதில் எழுத சௌகரியப்படும்.

ஸ்ரீ காசியிலிருந்து சீர்திருத்திய ஜாப்தா வந்து விட்டது. அதன்பிரகாரமே சென்ற மாதச் சஞ்சிகைகளையும், இம்மாதச்சஞ்சிகைகளையும் அனுப்பியிருக்கிறோம். ஆனால் அந்த ஜாப்தாவில் பலருக்கு லாட்ஜ் காரியதரிசி மூலம் என்ற விலாசம் மட்டும் கொடுத்திருக்கிறது. ஆகையால் காரியதரிசிக்கே அனுப்பிவருகிறோம். நேயர்கள் தங்கள் ராப்பர் நிம்பரைக்காட்டி, தங்கள் பூரா விலாசம், ஊர், ஜில்லா, தபாலாபீசு இவ்வளவையும் கண்டு எமக்கெழுதினால், அந்த விபரங்களைப் பதிவுசெய்து கொண்டு, நேரில் அனுப்புகிறோம்.

ப—ர்.

தற்கால நிலைமை.

ஸ்ரீ காஞ்சிபுரத்தில் நாளிது மேமீ 9, 10ஆம் தேதிக ளில் கூடும் சென்னைமாகாண கான்பரென்ஸுக்கு ஸ்ரீமதி ஸரோஜினி தேவியவர்கள் அக்கிராஸனம் வகிக்கும்படி சென்னை மாகாணத்திலுள்ள காங்கிரஸ் கமிட்டிகளால் தேர்ந் தெடுக்கப்பட்டு, ஸ்ரீமதியவர்கள் அந்த உத்தரவாதமான உயர்ந்த கண்ணியதைதையை வகிக்கிறார்கள். இந்தியாவில் இந்தியரால் செய்யக்கூடிய நிகரற்ற மரியாதை யென்ன வெனில், இந்தியன் நாஷனல் காங்கிரஸ்ஸின் ஆதிபத்தியம். அதற்கடுத்த மரியாதை மாகாணக் கான்பெரன்ஸின் தலை மையாகும். முதற் கண் கூறிய உயர்பதவியை இவ்வருஷத் திற்கு மாது ஸ்ரீ அன்னிபெஸண்டம்மை வகிக்கும் பாக்கி யம் பெற்றது யாவர்மனதிலும் இருக்கும். அதேவருஷத் தில் பின்னர்க் கூறிய மரியாதையை ஸ்ரீமதியவர்கள் அடைந்ததும் யாவராலும் பாராட்டத்தகுந்தது. முதன் முதலாக இவ்விதக்கூட்டங்களில் ஸ்திரீகள் அக்கிராஸனம் வகித்தது இவ்விரண்டு சந்தர்ப்பங்கள்தாம். இவ்விதம் ஒருமித்து இந்தியபுத்திரிக்கு கௌரவம் செய்வதாலேயே இந்தியர்கள் தங்களுடைய முன்னேற்றத்தையும், விசால மான நோக்கத்தையும், ஒருங்கே காட்டி விட்டார்கள். இந்தியாவானது தன்னுடைய உண்மையான பெருமையை அறியவும் வெளிக்காட்டவும் முன் வந்துவிட்டது என்று சொல்லலாம்.

***

ஸ்ரீமதி ஸரோஜினி தேவியவர்கள் பிரஹ்ம ஸ்ரீ அகோர நாத் சட்டோபாத்தியாயர்என்ற பிராமணசிரேஷ்டருடைய புத்திரி. அவர் படிப்பிலும் அறிவிலும் ஞானத்திலும்தேர்ந் தவர். "பிராமோ" என்ற கொள்கையைக் கடைபிடித் தவர். தமது குமாரத்திக்கு மேலான ஆங்கிலக் கல்வி யைப்புகட்டினார். ஸ்ரீமதியவர்கள் பற்பலதடவை இங்கி லாந்துக்குச்சென்றிருக்கின்றனர். இந்தியாவில் இவருக்கு நிகரான ஆங்கிலக்கவி ஒருவருமில்லையென்றுதிண்ணமாய்ச் சொல்லலாம். வெகுகாலத்துக்கு முன்னரே இவருடைய

கவி சாதுரியத்தையும், ஆங்கில பாஷையை உபயோகிப்பதில் உள்ள தேர்ச்சியையும் ஆங்கிலதேசத்துப் பண்டிதவரர்கள் மெச்சியிருக்கின்றனர். இத்துடன் குயிலினும் இனிய குரலுடன் தேனினும் இனியபொருள்பட்ட செய்யுள்களை இன்னவர் கூறக்கேட்டு இந்தியாவினிடம் பல ஆங்கிலேயர்கள் பற்றுக்கொண்டிருக்கின்றனர். இவர்சபைகளில் பேசும் பேச்சுக்கள் கூட கத்யம்போல் நடையாக பார்வையில் தோன்றினும், உண்மையில் உட்கருத்தின் மேன்மையிலும், ரஸத்தின் மிகுதியிலும், அன்பின் ஆர்வத்திலும் பொருள்களின் இரகஸ்யத்தை தெற்றென விளக்கும் உண்ணோக்கிலும், நடையழகிலும், சொல்லணியிலும், செய்யுள் எனவே யாவராலும் போற்றப்படும். தேசபக்தி நிசமும் இவரது வாக்பிரவாகத்தைக்கேட்டு பரவசமடையாதவர் கிடையாது. இவரையே பாரதமாதாவின் ஒற்றுமைக்குச் சான்ருகக்கூறலாம். பிராமண குலத்தில் பிறந்து நாயுடு குலத்தில் பிறந்த ஒருவரை மணந்ததால் பிராமணர் பிராமணரல்லாதவர் என்றஇருவகுப்பினரையும் ஒருங்கே சேர்த்திருக்கின்றனர் எனலாம். ஹைதராபாத்திலேயே வாழ்நாளைக்கழித்து ஆங்குள்ள மகமதியர்களுடன் அன்னியோன்னியமாய்ப் பழகியதால், மகமதியர்களுக்கும் இவரிடம் மிகுந்த பற்றுண்டு. எங்குச்சென்ருலும் இந்துக்கள் மகமதியர்கள் இருவரும் ஒற்றுமையாய் வாழவேண்டுமென்ற சங்கமுழக்கத்தையே இவர் முழக்குவர். ஆங்கில இலக்கியத்தின் ரஸத்தை அமுதெனப்பருகியும், மேனாட்டு நாகரீகத்தின் மேன்மையில் ஆழமுழுகியும் இருந்தும், இவரைப்போல் முற்றிலும் இந்தியராயிருப்பவரைக் காண்பது அரிது. ஆகையால் இந்தியாவின் ஐக்கியத்தைத் தம்மிடத்தில் நிரூபித்துக்காட்டியிருக்கிருர் எனக்கூறுவோம். மேனாட்டுநாகரீகத்தை முற்றிலும் அறிந்து அனுபவித்திருந்தும் தம்முடைய இயற்கையான ஆத்மகுணங்களின் நறுமணத்தையே வீசும்பான்மையால் இவ்வுத்தமியார் இந்தியாவானது மேனாட்டுநாகரீகத்தின் தத்துவங்களை முற்றுமறிந்தும், தன்னுடைய உண்மையான இயற்கை மேன்மையையே வெளிப்படுத்தி உலகத்தை உய்விக்கும் என்பதை குறிப்பிக்கிருர் என்று தோன்றுகிறது.

இந்தியாவின்பேரில் பொழியும் அருள்வெள்ளமானது இந்தியபுத்திரிகளை இயக்காமலிருக்குமா? தன்னயம் கருதாத பரோபகாரச் செயல்களிலும், தேச ஊழியத்திலும், நம்நாட்டு ஸ்ரீமதிகளையும் ஈர்த்துச்செல்லுகின்றது. அதற்கு அவசியம் நேரிட்டபோது ஊர் ஊராய்ச்சென்று உபந்யாசங்கள் செய்து ஆண்மக்களுக்கு ஊக்கமுண்டாக்கும்படி ஸ்ரீமதி சிவகாமுஅம்மாளைத் தூண்டியது எது? கல்கத்தாவில் காங்கிரஸ் நடந்தசமயத்தில் மைசூர் ஹைகோர்ட்டு ஜட்ஜு ஸ்ரீமான் சந்திரசேகர ஐயர் அவர்களின் மனைவியாரை ஒரு உண்டியல் பெட்டியை யெடுத்துக்கொண்டு பங்களூரில் நடைபெறும் ஸேவா ஸமாஜத்தின் உபயோகத்துக்காகப் பொருளுதவி தேடும்படி தூண்டியது எது? சென்ற சில நாட்களுக்கு முன்னர் சென்னையில் ஸ்திரீகள் கூட்டமாய்க்கூடி, யுத்தத்துக்குப்பின்னர் இந்தியர் பெறப்போகிற உரிமைகளில் ஆடவர் போல் பெண்டிரும் சரியான பங்கைப் பெறவேண்டும் என வற்புறுத்தச்செய்தது எது? புண்யநகரம் என்ற புனாவில் ஸேவா ஸதனத்துப்பெண்மணிகளை யுத்தத்துக்குச்செல்லச் சித்தமாகும் இந்தியப்பாதுகாப்புப்படை வாலிபர்களுக்கு விருந்தளிக்கும்படி செய்தது எது? ஸ்ரீமான் காந்தியவர்கள் செய்யும் ஸத்தியக்கிராஹ முயற்சிகளில் ஸ்ரீமதிகஸ்தூரிபாய், ஸ்ரீமதி அநஸூயாபேன் என்றபெண்மணிகளையும்சேர்த்து உபந்யாசங்கள் செய்யும்படிக்கும் ஜனங்களுக்கு உதவிசெய்யும்படிக்கும் ஊக்குவது எது? சென்னை ஹைகோர்ட்டு ஜட்ஜு சதாசிவையரவர்கள் மனைவியாரை சபைநடுவேநின்று உபந்யாசங்கள் செய்யப்போதிய தைரியத்தையும் உற்சாகத்தையும் கொடுப்பது எது? மேற்கூறிய அருள்வெள்ளத்தின் கிளர்ச்சியல்லவா?

*
* *

இவைபோன்ற அறிகுறிகளைக்கண்டு மதிமயங்கி மனம் வருந்தி, கலிமுற்றிவிட்டது, காலம்கெட்டுவிட்டது என்று சிலர்ஏங்குவர். இங்கிலாந்தில் சிலகாலத்துக்குமுன் செய்த சட்டத்தால் 6,006,000 ஸ்திரீகளுக்கு ராஜஸபைக்கு

அங்கத்தினரைத் தேர்ந்தெடுக்கும் உரிமை கிடைத்திருக்கிறது என்று தெரியவருகிறது. இந்தியாவோ உலகத்திலுள்ள இதரநாடுகளுடன் கம்பித்தந்தி, கம்பியில்லாத்தந்தி, கப்பல், ஆகாய விமானம், ரயில் முதலியபல பிணைப்புகளால் பிணைக்கப்பட்டிருக்கிறது. ஒருதேசத்தில் நடைபெறும் மாறுதல்கள் இந்தியாவைப் பாதிக்காமலிருக்க வேண்டுமென்று நினைப்பதற்கிடமில்லை. கண்மாயில் நீர்பெருகிஇருக்க அதற்குச்சமீபத்திலிருக்கும் நிலங்களில் அந்நீர்ப்பெருக்கால் ஊற்றுகள் உண்டாகாமலிருக்குமா? ஆற்றில் வெள்ளம் ஓங்கிவரும்போது வாயால் அநியாயமாய் வெள்ளம் வருகிறதேயென்று சொன்னால் யாதுபயன்? வெள்ளத்தை எவ்விதம் உபயோகிக்க வேண்டும் என்று புத்திமான்கள் யோசனைசெய்து அவ்வண்ணம் உபயோகித்தால் நாடும் நலம்பெற்று, பிறநாட்டுக்கும் உபகாரம் செய்ய இயலும். ஆகையால் நம்நாட்டில் ஏற்படும் கிளர்ச்சியானது ஸ்திரீகளை சம்பந்திக்காமலிருக்காது. அவர்களது புத்தியானது மேல்நோக்கிச் செல்லும்படிக்கும், தேசக்ஷேமத்தை நாடும்படிக்கும், இந்தியாவின் கீர்த்தியை அதிகரிக்கும்படியான துறைகளில் பாயும்படிக்குமான வழிகளைப் பெரியார்கள் காட்டி இக்கிளர்ச்சியை உபயோகிப்பதே மேதாவிகளுடைய வழியாகும்.

*
* *

ஸ்திரீகளை இவ்வண்ணம் ஒழுகும்படிசெய்தால் பொருந்துமாயின், அவர்களை இளமையிலே நல்வழிப்படுத்தவேண்டுவது அவசியமன்றோ? அது அவசியமாயின், இந்தியர்களால் ஆளப்பட்ட இந்திய தேசியக்கல்லூரிகளையும், பள்ளிகளையும் ஸ்தாபித்து அவைகளில் மதப்பயிற்சியும், தேசபக்தியும், போதிக்கப்படும்படி செய்வது அவசியமன்றோ? இவ்வண்ணமே தேசியக்கல்வி வாரத்தன்று வசூலான திரவியத்தைக்கொண்டு ஆங்காங்கு பள்ளிகள் ஸ்தாபிக்கப்போவதாய்க் கேட்டு மனமகிழ்கிறோம்.

1914-ஆம் வருஷம் ஆகஸ்டுமாதம் முதல் உலகைப் பாழாக்கிவரும் இக்கோரயுத்தமானது ஒவ்வொரு தேசமாக பலதேசங்களையும் தன் பாழும்வயிற்றுக்கு இரையாக்கி வந்து பல நாடுகளை நாசமாக்கி விட்டது. கொடுமையில் நிகரற்ற ஜர்மனியர்ராஜியென்ற வியாஜத்தால் ருஷ்யாதேசத்துக் குடியரசை தன்வசப்படுத்தி விட்டார்கள். நம்மாதிரு பூமியானது இதுகாறும் யுத்தத்தின் கொடுமையை நேரில் அனுபவிக்காமலிருந்தது. இந்தியர் யுத்தத்துக்குப்போய் தம்முடைய வீரச்செயல்களை உலகம் மெச்சும்படிசெய்ததும், இந்தியர்கள் தம்மாலியன்றமட்டும், திரவியத்தை ஏராளமாக தானமாய் இங்கிலாந்துக்கு வழங்கியதும் வாஸ்தவமே. ஆனல் நேரில் சண்டையின் சம்மந்தம் இந்தியாவில் ஏற்படவில்லை. ஆனல் இங்கிலாந்து பிரதமமந்திரியவர்கள் ராஜப்பிரதிநிதிக்கு அனுப்பிய நிருப மூலம் இந்தியாவானது சண்டையில் நேரான சம்மந்தம் அடையும்படி நேரிடுமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. பிரதிநிதியவர்கள் இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்து பற்பல பிரமுகர்களையும், சிற்றரசர்களையும் தருவித்து, பேரவை கூட்டித் தங்களாலான மனிதசகாயத்தையும் பொருளுதவியும் செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றனர். அவர்களும் அதற்கிசைந்திருக்கின்றனர். இதுகாறும் பிரிடிஷ் ராஜாங்கத்தாரின் அமைதியான ஆட்சிக்குள்ளிருந்ததனல் இந்தியர் தம்முடைய வீரச்செயல்களையும் ஆற்றலையும் காட்ட இடமின்றி அவைகள் கொஞ்சம் உறக்கம் கொண்டிருந்தன. ஒருவேளை தூங்கும் வீரத்தனத்தையும் சூரச்செயல்களையும் பிரிடிஷ் ராஜ்பத்தின் உதவிக்களிக்க உலகம் பிரமிக்கும்படி நிருபித்து இந்தியா தனது பிறப்புரிமையெனக்கேட்கும் சகல சுதந்தரத்தை வகிக்கும் ஆற்றலை வெளிப்படுத்த வேண்டுமென்பது இறைவனது திருவுள்ளமோ? இந்தியர் தம் நாட்டைப் பாதுகாக்க வல்லவர் என்றும் அவர் கோழைத்தனமுள்ளவர் அல்லர் என்றும் நிரூ

பிக்க இந்திய வாலிபர்கள் கூடிய சீக்கிரத்தில் ஏராளமாக முன் வரவேண்டியது அவர் கடமையாகும். அவ்வண்ணம் இந்திய வாலிபர் உற்சாகமாக வந்து இந்தியாவினுடைய வும், பிரிடிஷ் ஸாம்ராஜ்யத்தினுடையவும் பாதுகாப்புக்கு உதவி செய்யும்படி, இந்தியர் கோருகிற வேண்டுகோள்களை யும் சீர் திருத்தங்களையும் உதவுவார்களாக. எவ்வாற்றுனும் இச்சமயம் இந்தியர் தம் தேசத்தைக் காப்பாற்ற முன் வருவார்களாக.

⁂

மைசூர் ராஜ்யத்தில் மஹா ராஜாவின் உதாரகுணத் தாலும், திவான் விசுவேசுவரய்யா அவர்களுடைய தீர்க்க திருஷ்டியினாலும் ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை தைரியமாய் பிரதிநிதிகள் சபையில வெளியிட ஆரம்பித் திருக்கிறார்கள். மைசூர் பிரதமக்கல்வியை யாவருக்கும் இலவசமாகக் கொடுக்க ஏற்பாடு செய்திருப்பதுடன, சில காலத்துக்கு முன்னர் மேல்தரக் கல்வியையும் இலவசமாக்க வேண்டுமென்று பிரதிநிதிகள் தீர்மானித்தார்கள். மைசூர் சர்வகலாசாலையின் ஆளுகையின் கீழுள்ள கல்லூரிகளில் இவ்விதமாக உயர்தரப்படிப்பை இலவசமாக்க திவானவர் கள் இணங்கியிருக்கிறார்கள். ஆனால் மைசூரில் பிறந்தவருக் கே இவ்விலவசப் படிப்பு கொடுக்கப்படும் என்று விதிக்கப் பட்டிருக்கிறது. இதுவும் போதாதென்று, பிரதமக்கல் விக்கும் மேல்தரக் கல்விக்கும் மத்தியிலுள்ள இரண்டாம் தரக் கல்வியையும் இலவசமாக்க வேண்டுமென்று பிரதிநிதி களில்பலர்வேண்ட திவானவர்கள் இவ்வித அவாவானது மிகவு ம் மெச்சத்தக்கதுஎன்றும், கூடுமானல் அங்ஙனம் செய்யத் தனக்கு மிகுந்த சந்தோஷமுண்டாகும் என்றும், ஆனால் அந்த அவாவை பூர்த்திசெய்யப் போதுமான வஸதிகளும், பொருளும், பள்ளிக்கூடங்களும், உபாத்திமாரும் இல்லை யாகையால் அது இன்னும் கொஞ்ச காலத்திற்கு முடியா தென்றும் கூறினர். மைசூர் வாசிகள் கல்வி விஷயத்தில் வெகு சீக்கிரத்தில் மிகுந்த சிலாக்கியத்தை அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை. எப்படி சம்மந்தப்பட்ட பல ஜலாசயங்களில் ஒன்றில் நீர் பெருகினல் மற்றவைகளிலும்

அதே உயரத்திற்கு நீர் உயருமோ அதேமாதிரி மைசூரில் கல்வியின் நிலைமை யுயர்ந்தால் அத்துடன் இந்தியாவின் மற்ற பாகங்களிலும் கல்வியின் நிலைமையுயரும் என்பதில் ஐயமில்லை. கல்வியுயர நாட்டில் சகோதரபாவமும் ஒற்றுமையும், ஞானமும், நாகரீகமும் உயருமல்லவா? மேற்கூறியதற்கேற்ப பிரிடிஷ் இந்தியாவிலும் பற்பல முனிசிபாலிட்டிகளில் சாதாரணப் பிரதமக்கல்வியை இலவசமாக்கவேண்டுமென்று தீர்மானிப்பதையும், சில மாகாணங்களில் அக்கல்வியை இலவசமாக்க சட்டம் ஏற்படுத்துவதையும் பார்க்கிறோம். கூடிய சீக்கிரத்தில் முன் காலத்திலிருந்ததைப் போலவே சகலவிதமான கல்வியும் முற்றிலும் இலவசமாகி விடும் என்று நம்புகிறோம்.

***

மேமீ 5உ யை பிரஹ்மஞ்ஞான சபைகள்தோறும் ஒரு ஞாபகத்தினமாகக் கொண்டாடுவது வழக்கம். அத்தினத்தில் தான் பிரஹ்மஞ்ஞான சபையை ஸ்தாபித்த ருஷ்யா தேசத்துச் சீமாட்டி ஹெலனு பிளவாட்ஸ்கியம்மாள் இவ்வுடலை நீத்தார். ஸஹோதர பாவத்தை உலகத்தில் பரவச் செய்வதையே நோக்கமாகக் கொண்டது பிரஹ்மஞ்ஞான சபை. ஏழைகளுக்கு அன்னமிடுவதையும் சகல மதங்களின் கிரந்தங்களினிருந்து முக்கியமான பாகங்களை வாசிப்பதையும், இவ்வுலகத்தைவிட்டு நீங்கிய பிரஹ்மஞ்ஞானசபைப் பெரியோர்களை ஞாபகப்படுத்துவதையும், காட்டிலும் சகலருடைய மனத்திலும் சகோதர பாவத்தையும், ஐக்கியத்தையும், மனச் சமாதானத்தையும் உண்டுபண்ணக்கூடியவை வேறு ஒன்றுமில்லை. ஆகையால் ஒவ்வொரு கிளைச்சபையிலும் இம்மூன்று வழிகளையும் கடைப்பிடித்து வருகிறார்கள். ஒவ்வொரு கிளைச்சபையிலும் அத்தினத்தில் ஒருமித்துச் சகோதரபாவம் அதிகரிக்கவேண்டும் என்ற தீவிரமான மனச்சங்கற்பத்தால் இறைவனது திருவுள்ளம் கனிந்து இக் கோரயுத்தத்தின் கொடுமை கொஞ்சமாவது குறையாதா?

ஆர். ரெங்கசாமி ஐயர்.

ஒரு நல்ல சமயம்.

கீழ்த்திசையில் போதி சத்துவா என்று பெயர் பூண்டவரும், மேற்கில் கிறிஸ்து என்று அழைக்கப் படுபவரும், உலக குருமூர்த்தியும், உலகங்களில் தோன்றும் எல்லா மதங்களையும் ஸ்தாபித்தவருமான மகானுபாவர் இப்பூமியில் மீண்டும் சமீபத்தில் அவதரிக்கப் போகிறார். நம்முடைய சநாதநமான உண்மைகளை மறுபடி புதிய மாதிரியாக எடுத்துக் காட்டுவதற்கும், தற்காலமிருக்கும் மதங்களைச்சார்ந்தவர்களில் எவர்கள், எல்லா மதங்களில் காணப்படுவதும், பல வேறு சமயங்களையும் ஒருங்கே சேர்த்து ஒற்றுமைப் படுத்துவதுமான, ஞானத்தை ஒப்புக்கொண்டு விசாரணை செய்யத் தயாரா யிருக்கிறார்களோ, அவர்களை ஒன்றாகச் சேர்ப்பதற்கும், அவர் அவ்வாறு அவதாரம் செய்யப் போகிறதாகத் தெரியவருகிறது. எவர்கள் நெல்லுக்குள்ளிருக்கும் அரிசியைப்போன்ற உண்மைப் பொருளுடன் ஒன்றாக வேண்டுமென்க்கருதி மேலுமியை ஒத்தவெளி வேஷத்தைக் கவனியாது விட்டுவிட விரும்புகிறார்களோ அவர்கள் வெளிப்பார்வைக்கு பேதமுள்ளவைகள் போலத் தோன்றும் சரீரங்களில் வாஸ்தவத்தில் ஒரே ஆத்மா இருப்பதையும், அந்த பரமாத்மா தான் எல்லா ஜனங்களாலும் விசாரிக்க வேண்டிய உண்மைப்பொருளென்பதையும், தெரிந்து கொள்ளுவார்கள். இவ்வுண்மையானது அநேக வீண் வேஷங்களாலும் டம்பங்களாலும் சடங்குகளாலும் மூடப்பட்டு மறைந்திருப்பதால் ஜனங்கள் அதைப் பெரும்பான்மையும் மறந்து விட்டனர். ஆனது பற்றி, மகா புருஷர் ஒருவர் அவதரித்து மேற்போர்வைகளை நீக்கி ஆழ்ந்திருக்கும் உண்மைகளை எடுத்துக் காட்டி அறிவிப்பது அவசிய மாயிற்று. இப்படி மேன்மேலும் அபிவிர்த்தியாகிற விஷயத்தில் இவ்வுலகமானது, நம்மவர்களில் அநேகர் நினைப்பது போல, தற்செயலாய் கீழே மூழ்கவாவது, மேலே மிதக்கவாவது, தட்டுத்தடுமாறிச்செ

ல்லவாவது, வழியில் தவித்துத் தனித்து பின் தங்கவாவது நிர்க்கதியாய் விடப்படவில்லை. அப்படி நினைப்பவர்கள் அவரவர்களுடைய சொற்பமான யோக்கியதைக்கும் அற்பமான புத்திக்கும் தகுந்த மயக்கத்தால் வீணே வருந்துகிறார்கள், ஏனெனில், அவர்கள் இந்த உயிர் வாழ்க்கையாகிற நெசவு வேலையில் அடிப்பாகத்தை மாத்திரம் பார்க்கிறார்களே யொழிய, அதன் பூர்ணமான அமைப்பையும் விசித்திரத்தையும் தெரிந்து கொள்ள மேற் பக்கத்தை நோக்க சக்தியற்றவர்களாய் விடுவதால், அம்மாதிரியான அமைப்பு ஒன்று மில்லையென்றே ஆதார மற்ற தீர்மானம் செய்து விடுகிறார்கள். வாஸ்தவத்தில் உலக அரசாட்சி சிறந்த தோர் அமைப்புப் பொருந்தியுளது. ஆனால் அதை நாம் பார்க்க வேண்டு மென்றால் இவ்வுலகத்தின் தாறுமாறான குழப்பங்களுக் கெல்லாம் மேலே கிளம்பி ஈசுவரனுடைய சத்தி எப்படி விசித்திரமாக வேலைசெய்கிறதென்று நன்றாய் கவனிக்க வேண்டும். அப்படி கவனித்து நோக்குங்கால், ஈசுவரனுடைய சக்தியானது கூட்டு விப்பதையும், பிரிப்பதையும் சீர்படுத்து வதையும், கடவுள் திருவுள்ளப் பிரகாரம் சம்பவிக்கும் சகல காரியங்களும் அக்காரியங்கள் நிகழ்வதற்கு முன் இருந்த ஸ்திதியைக்காட்டிலும் உயர்ந்த ஸ்திதியிலேயே உலகத்தை வைப்பதையும், உலகங்கள் அவருடைய சக்தியால் மெள்ள மெள்ள கிரமமாக சித்திர அமைப்பு பொருந்தி விளங்குவதையும் நாம் பார்க்கலாம். இப் பூமியிலிருக்கும் சிற்றறிவுடைய மானிடர்களுக்கு, நன்கு விளங்கா விடினும், உலகமானது எக்காலத்திலும் பேரறிவுடனும் மிக்க ஊக்கத்துடனும் சரியான வழியில் செலுத்தப்பட்டும், அரசாளப்பட்டும் வருகிறது. இந்த விஷயத்தை எவர் கஷ்டப்பட்டுத் தெரிந்து கொள்ள முயலுகிறார்களோ அவர்களுக்கு நன்றாய்த்தெரியும்.

இவ்வாறு அப்போதைக் கப்போது பிரத்தியேகமான பிரயத்தினம் செய்யும்போதெல்லாம் உலகங்களின் ஆட்சியைச்சார்ந்த எல்லாப்பிரிவுகளின் பூர்ணமான சக்தி

யானது அவ்விஷயத்தில் ஒருங்கே சேருகின்றது. இவ்வாறு ஒருங்கு சேர்ந்த சக்தியானது ஒரு திசையை நோக்கி ஒரு பெரிய மலையருவி பாய்ந்து வருவது போல வருகின்றது. இந்த மலையருவியில் தைரியத்துடன் விழுந்து செல்வதற்கு எவன் இஷ்டப்படுகிறானோ, அவன் அந்த சக்தியினுடைய உதவியால் வேறு உபாயங்களால் கிடைப்பதற்கரிதான விசேஷ சௌகரியத்தைப் பெற்று நியாய மார்க்கத்தில் தடையின்றி பிரயாணம் செய்வதற்கு வல்லமை வாய்ந்தவன் ஆகின்றான்.

இந்த நன்மை பெறுவதற்கு அவன் யாது செய்ய வேண்டும்? அவதாரம் செய்யப்போகிற மகானு பாவருடைய பக்ஷத்தில் அவன் சேர வேண்டும். அதாவது தீமையைத் தவிர்த்து நன்மை மார்க்கத்தைக் கடைப்பிடித்தலும், சுய நன்மையைக் கருதாது, பரோபகாரத்தையே கைப்பற்றுதலும் என்பதேயாம். ஜகத்குரு வருகை சம்பந்தமான வேலைகள் மூன்று வகைப்படும் அவையாவன.

(1) அவர் வருகையின் பொருட்டுத் தயார் செய்தல்.

(2) அவர் இப்பூவுலகில் இருக்கும்போது அவருக்கு ஊழியம் செய்தல், அவர் வேலைக்கு நம்மால் இயன்ற உதவி புரிதல்.

(3) அவர் நம்முடைய மத்தியிலிருந்து சென்ற பிறகு அவருடைய வேலையை விடாது தொடர்ந்து செய்தல்.

மேலே சொன்ன மூன்று விஷயங்களிலும் தற்சமயம் நாம் முக்கியமாய் முதல் விஷயத்தில் அதிக சிரத்தையுடன் வேலை செய்ய வேண்டியது அவசியமாகும். இந்த விஷயத்தை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று நம்மை நாம் சீர்திருத்தித் தயார் செய்து கொள்வது, மற்றது பேரொளி பிரகாசிக்கும் பொழுது மற்ற ஜனங்களும் அதை பார்க்கும் வண்ணம் நம்மால் இயன்ற உதவி செய்வது. அப்பேரொளியல்லவா இப்பூவுலகத்திலிருக்கும் ஒவ்வொருவருக்கும் பிரகாசத்தை யருள் செய்கிறது? அவ்வொ இருள்ளி

சூழ்ந்த இப்பூமியில் முன்னம் பிரகாசித்தபொழுது உலகம் அதை செவ்வனே தெரிந்து கொள்ளவில்லை யல்லவா?

உதயதிசை நக்ஷத்திர சங்கமானது ஜகத்குரு வரும் மார்க்கத்தை சீர்படுத்தி நேர் செய்யும் விஷயத்தில் சங்கத்தைச் சார்ந்த அங்கத்தினர்களுக்கு உதவி புரிவதை முக்கிய உத்தேசமாகக் கொண்டது. நம்மை சீர்திருத்தி சித்தப்படுத்திக்கொள்ளும் விஷயத்தில் நம்முடைய சங்கத்தலைவர் தான் இயற்றிய நிகரற்ற "சற்குரு சரணங்களில்" என்ற புஸ்தகத்தில் ஊட்டியிருக்கும் அருமையான உபதேசங்களை நாம் மிகுந்த சிரத்தையுடனும் ஊக்கத்துடனும் கவனித்து நடந்துகொள்ளுவதைக் காட்டிலும் சிறந்த உபாயம் வேறு ஒன்றுமில்லை. அக்கிரந்தத்தினின்று அதி சீக்கிரம் நம்முடைய மத்தியில் அவதரிக்கப்போகின்ற உத்தமர் பெயராலும் அவர் அபிப்பிராயத்திற்கு இணங்கியும் இப்பொழுதிருந்தே நாம் வேலை செய்ய முயலுவதற்குத் தெரிந்துகொள்வோமாக. அவர் தர்சனத்தை ஆவலுடன் எதிர்பார்க்கும் அன்பர்களில் நாம் ஒருவராகும்படி பிரயத்தினம் செய்வோமாக.

நமக்கு வாய்த்திருக்கும் மிகச்சிறந்த இச் சமயத்தை நாம் வீணாக்கவேண்டாம். ஆச்சரியத்தை விளைவிப்பதும் மகிமையைப் பரவச்செய்வதுமான ஜகத் குருவின் அவதார சமயத்தில் நமக்குத் தக்குதியான ஓர்சிறிய தாழ்ந்த வேலையை நாம் செய்வதற்கு யோக்கியமாக நம்மைச் செய்துகொள்ளத் தவற வேண்டாம். அத்திருநாளின உதயமானது சமீபித்துவிட்டது. பூர்வத்திலிருந்த ஜனங்களைக்குறித்துச் சொன்ன அடியிற்கண்ட சொற்களை நம்மைப்பற்றி சொல்லும்படி நாம் நடந்து கொள்வோமாக.

"நீங்கள் பார்க்கும் இந்த காட்சிகளை பார்க்கும் கண்கள் மகாபாக்கியம் செய்தன. நீங்கள் பார்க்கின்ற காட்சிகளைக் காணவேண்டியல்லவோ பிரஹ்மரிஷிகளும், ராஜரிஷிகளும், காண்பதற்கு மிக ஆவலுடன் கஷ்டப்பட்டும், அவர்

கள் காணக்கிடைக்க வில்லை. நீங்கள் கேட்கும் தேன் மொழிகளைக்கேட்க வல்லவோ அவர்கள் பிரயத்தினப் பட்டும் அவ்வாறு கேட்கும் பாக்கியத்தைப் பெற்றிலர்.''

அத்திருநாள் வருகிற செய்திபை முந்தித்தெரிவிக்கும் தூதருடைய சொற்கள் செவிகளில் ஏறுதபடி, உலகவாழ்க்கையின் குழப்பத்தால், காதுகள் செவிடுபடும்படி மன்றாடிக் கொண்டு வருந்தும் ஜனங்களில் ஒருவராக நாம் ஆய்விட வேண்டாம். பூர்வம் பாலஸ்தினு தேசத்தில் திருவவதாரம் செய்த நாளில் அநேக ஜனங்கள் ஆனமாதிரி அத்திருநாள் உதயமாகும்போது அவ்வெளிச்சத்தைப் பாராத குருடர்களாக வேண்டாம். "நம்முடைய சங்கக்கூட்டமானது கொஞ்சமாயிருப்பினும் பெரிதாயிருப்பினும், இருளில் ஆழ்ந்தும் அந்தகனுக்காளாகவும் கிடக்கும் ஜனங்களுக்குப் பிரகாசத்தை யளித்து சமரசமான மார்க்கத்தில் நம்மை இட்டுக்கொண்டு போவதற்கு மேலிருந்து வரும்பேரொளிப்பெருக்கு வரும் சமயத்தை அறிந்து கொள்ள நாம் சித்தமாகவாயினும் இருப்போமாக.

ஆத்மநாதய்யர்.

பத்திரிகை விமர்சம்.

தென்னிந்திய விவசாயக் கைத்தொழில்:—(சுகாதாரம்) என்னும் மாதாந்தரப்பத்திரிகை இப்பத்திரிகையின் 8-வது தொகுதி 1-வது பகுதியைப்பெற்றோம். சிலகாலமாக நின்றிருந்த இப்பத்திரிகையை ஆசிரியர் மீண்டும் நடத்திவர எண்ணங்கொண்டு இச்சஞ்சிகையை வெளியிட்டிருக்கிறார். இக்தியக்கைத்தொழில்களில் முக்கியமானது விவசாயம். அதை முன்னேற்றுவிக்க முயலும் ஒவ்வொரு முயற்சியும் போற்றத்தக்கதாம்.

(1) தென்னை (2) சென்னை ராஜதானியில் தமிழ் ஜில்லாக்களுக்கேற்ற தழை எருக்கள் (3) தெலுங்கு ஜில்லாக்களுக்கு ஏற்ற தழை எருக்கள்:—என்ற பெயரிய மூன்று துண்டுப்பத்திரிகைகள் வரப்பெற்றோம். அவை ஆங்கிலத்தில் பிரசுரப் படுத்தப்பட்டிருக்கின்றன. அருமையான பல விஷயங்களைக் கொண்டிருக்கும் இப்பத்திரிகைகளை ஏராளமாக தமிழிலும் தெலுங்கிலும் முதன்முதலாக அச்சிட்டு நாடெங்கும் பரப்புவது விவசாய இலாகாக்காரர் கடமையாகும். ஆங்கிலத்தில் மாத்திரம் வெளியிடுவது பிரயோஜனமற்றதாகும்.

மநுஸ் மிருதியின் ஆதாரம்.

பூர்வகாலம் முதல், ஹிந்துக்களின் ஆசாரமுறையை ஒழுங்கு படுத்தி வந்திருக்கும் முக்கிய நூல்களில் **மநுஸ்மிருதி** என்பது முக்கியமானது. இதன் அருமை பெருமையை நம்மவர் மறந்ததனுலேயே இஹபர வாழ்வு இரண்டிலும் தாழ்மையடைந்திருக்கிறார்கள். மேல்நாட்டு நாகரிகமும், ஜன ஸமூஹ ஒழுங்குகளுமே நம்நாட்டில் பிரபலமாகிவருவதால், ஸ்வதேச தர்மத்தையே நாம் இனி அநுஷ்டிக்கவேண்டுமென்று நம்மவர் எண்ணிவரும் இந்நாளில் இதையறிவதிற் பயனுண்டு. ஏனெனில் இது பலமான அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டது. இதன் அஸ்திபாரமான பல விஷயங்களைப்பின் வருமாறு ஆராய்வோம்.

உலகத்தில் நாநாவிதமான வேற்றுமைத்தோற்றங்களும், அவைகளின் மாற்றங்களும் ஏன் நேருகின்றன? உலகமுழுவதிலும் நடப்பதைச் சுருங்கச்சொல்வோமானுல் உருவங்கள் தோன்றுவதும் அழிவதுமேயாம். இவ்வுருவங்களைத் தோன்றவும் அழியவும் செய்வதுயாது? இம் மூலகாரணம் யாது? பல்கோடி ஜனங்களை யாண்டுவரும் மன்னுதிமன்னரை வாழ்விப்பதும், வீழ்விப்பதும், பல சிற்றரசுகளை ஓர் மகாராஜ்யமாகச் சேர்ப்பதும், ஓர் மகாராஜ்யத்தைப்பல சிற்றரசு களாகவும், குடியரசுகளாகவும் தகர்ப்பதும், ஓர் ஜாதியாரைத் தாழ்த்துவதும் மற்றோர் ஜாதியாரை உயர்த்துவதும், ஓர்மதத்தை ஸ்தாபிப்பதும், மற்றமதங்களை மறைப்பதும், கடலினின்று ஓர் தீவைக் கிளப்புவதும், மற்றோர் தேசத்தை ஜலப்பிரளயத்தினுலும், எரிமலைப் பெருக்கினுலும் அமிழ்த்துவதும், தொட்டிற் பிள்ளையைப்போல் ஒரு தேசத்தாரைப் பாதுகாப்பதும், மற்ற தேசத்தார்களுக்குள் ரணகளத்தை யுண்டுபண்ணி கோடாநு கோடிஜனங்களை மாய்ப்பதும் என்ன விந்தையாயிருக்கின்றன? இவற்றை நடத்துவோர் யாவர்?

இக்கேள்விகளுக்கு விடையறிவோமானால், மநு என்பவர் யாவர், எத்தன்மையர், ஸ்மிருதிஎன்பது எத்தன்மையது என்று உணர்வோம்.

ஐதரேய ஆரண்யகத்திற் கூறப்பட்டுள்ளபடி கல்முதலிய தாதுப்பொருள் களிடத்து "இருத்தல்" என்னும் தன்மை மட்டும் விளங்குகிறது. விருக்ஷ வர்க்கத்தினிடத்தே "இருத்தல்" என்னும் தன்மையோடு, "உணர்" வென்னும் தன்மையும் விளங்குகிறது. பசு, பக்ஷி, முதலிய மிருக வர்க்கத்தினிடத்து முன்னிரண்டு தன்மைகளோடு "அறிவே"ன்னும் இன்னொரு தன்மையும் பிரகாசிக்கிறது. இவ்வர்க்கங்களில் ஒன்ருவது தந்தமக்கு இன்னின்ன தன்மைகளும், சக்திகளும் இருக்கின்றன வென்று அறிவதில்லை. ஆனால் மனிதன் மட்டும் தானிருப்பதாகவும், உணர்வதாகவும், அறிவதாகவும் தானுகவே உணருகிருன். இவ்வியற்கையினுல் தான் மனிதனை மனிதனென்கிருேம். மந் என்னும் வடமொழிச்சொல்லுக்கு "நினைத்தல்" என்ருர்த்தம். அதாவது மனிதன் முன்னும் பின்னும் யோசிக்கிருன். தன்னையும் அறிகிருன். தான் அல்லாதவற்றையும் அறிகிருன். அதனுல் உலகவாழ்க்கையின் முழுக் கருத்தையு மறிகிருன். மற்ற ஜீவ வர்க்கம் எதுவும் அவ்விதம் அறிய இயலாது. ஏனெனில், தன்னைத்தான் அறியும் சக்தி அவை ஒன்றிற்காவது ஏற்படாமையால், அவற்றினிடத்து அறிவானது குறைவாகவே உள்ளது. மனிதனிடத்துமட்டும் அறிவு பூர்ணமாய் விளங்குகிறது. ஸெளர்ய மண்டலம் முழுவதும், அணுவுக்குள் அணுவாயும், மஹத்துக்குள் மஹத்தாயும் வியாபித்திருக்கும் சைதந்ய சக்தியானது மனிதனிடத்துத்தான் தன் பூர்ண சொரூபத்தோடு பிரதிபிம்பிக்கிறது. அதனுல் தான், மனிதன் தன்னைத்தான் அறிவதின் மூலமாய்ப் பரமாத்ம சொரூபத்தை அறியமுடியு மென்கிருேம். மோக்ஷம், கைவல்யம், நிர்வாணம் என்று பலவாருகக் கூறப்படும் மேம்பதவியை மனிதப்பிறவியினின்று தான் அடைதல் கூடும் என்

பதன் கருத்தும் அதுவேயாம். எப்பிறவியினும் அரியது மானிடப்பிறவி என்பதன் இரகசியமும் அதுவேயாம். வாயு புராணத்திற் கூறியபடி ஸௌர்ய மண்டல முழுவதும் தமது பார்வையைச் செலுத்தக் கூடியவர்களாயும், பிரஹ்மாண்டத்தின் ஆரம்பமுதல் அந்தம் வரைக்கும் ஏற்பட்ட நிகழ்ச்சியனைத்தையும் நினைவிற்கொள்ளக் கூடியவர்களாயும், அமிருதத்வமென்னும் நிலையையடையக் கூடியவர்களாயும், மனிதர்கள் ஆகக்கூடும் என்பது இதனால்தான். மனிதனிடத்துள்ள இந்த அம்சத்தைத்தான் ஆத்மாவென்கிறோம். ஆகையால் இவ்வாத்மாவைப் பற்றிய சாஸ்திரமே, சாஸ்திரமென்றும், மற்ற சாஸ்திரங்களுக்கெல்லாம், இதுவே ஆதாரமென்றும், நம்மவர் கருதிவந்தார்கள். சுவரை வைத்துச் சித்திரமெழுதுவதுபோல், முதலில் ஆத்ம சாஸ்திரத்தை அப்பியசித்துப் பிறகுதான் மற்ற சாஸ்திரங்களைப் பயின்று வந்தார்கள். எல்லா சாஸ்திரங்களும், கலைகளும், தொழில்களும் மனிதவாழ்க்கைக்காகவே ஏற்பட்டுள்ளன. ஆயினும் மனிதவாழ்க்கையைப்பற்றி நேரேயே எடுத்துக்கூறும் சாஸ்திரம் எல்லாவற்றினும் அதி முக்கியமல்லவா? அதனால் தான் இதை எல்லா வித்தைகளுக்கும் ராஜாவென்றும், ராஜரஹஸ்யமென்றும், அதிபரிசுத்தமென்றும், நீதிக்கு நீதி என்றும், நம் கண் முன்னேயே ஜனங்களுக்கு சாசுவதமான சுகத்தையும் சபாதானத்தையும் கொடுக்கக் கூடியதென்றும் பகவான் கீதையிற் கூறியிருக்கிறார்.

இதன் விசேஷத்தை நம்மவர் வெகுகாலமாகவே அறிந்து வந்திருக்கிறார்கள். ஆயினும், மேல்நாட்டார் இதை இப்போதுதான் உணர ஆரம்பிக்கிறார்கள். பௌதிக சாஸ்திர ஆராய்ச்சியில் சக்திக்கெல்லாம் மூலாதாரம் இன்னதென்று விளங்கவில்லை. ரசாயன சாஸ்திரத்தில், அணுவை ஆராயப் புகும்போது, அணுவென்பதே பொய்யான தோற்றம். சக்தியினின்றும் காரியப்படுவதே அணு என்பதாகக் கூறுகிறார்கள். ஸூக்ஷ்ம வஸ்துவாகிய ஆத்மாவைப்பற்றியறியாவிடில் அச்சாஸ்திரங்களின் கரை காணமுடியாதென்கிறார்கள்.

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் ஒவ்வொரு அரசரும் தலைவரும் இச்சாஸ்திரத்தைக் கட்டாயம் அறியவேண்டு மென்று மநுவானவர் விதித்தார். ஏனெனில், அப்போது தான் தமது ஜனங்களை இஹபர க்ஷேமத்திற்குச் சாதகமான வழியில் நடத்த இயலுவார்கள். அப்போதுதான் ஜனங்களுடைய பிரேமையை ம், தேவர்களுடைய கிருபையையும் பெறுவார்கள்.

நமது கொள்கைப்படி, பூலோகத்தரசர்களுக்கெல் லாம் ஓர் உயர்லக்ஷ்யமான ஒரு அரசரே மநுவாவார். அவரே மனிதகோடி யனைத்தையும் ஆளுபவராவர். ஏனெனில், கல் பகோடிகாலமாக, எத்தனையோ விதமான ஏற்றத்தாழ்வான நிலைமைகளிலெல்லாம் தாம் இருந்து உழன்று அநுபவித்த நினைவு அவருக்குத்தான் பூர்ணமாயுண்டாகையால், அவரே காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்றவாறு சட்டங்களை விதிக்கத்தகுந்தவர். இப்படி மனிதவர்க்கத்தை மேன் மேலும் உயர்ந்த படிகளில் நடத்துவதற்காக அவருக்குப் பலர் சகாயம் புரிகிறார்கள். அவர்களைத்தான் ரிஷிகள், சிஷ்டர்கள் என்போம்.

"சிஷ்டர்கள்" என்றால் மற்றவர்களைக் காட்டிலும் தேர்ந்தவர்களென்றர்த்தம். தாமும் கற்றுப் பிறருக்கும் கற்பிப்பவர் என்றர்த்தம். மற்றவர்களைக் காட்டிலும் தர் மத்தை நன்கு அறிந்து செய்து முடிப்பவர்கள்; முந்திய மந்வந்தரத்திலிருந்து தேர்ச்சிபெற்று, இம்மந்வந்தரத் திலும் புதியஜீவர்களை அவரவர் தர்மத்திற் செலுத்தி பிரா சீன தர்மத்தைஅழியாமற் பாதுகாப்பவர்கள்; மநுவும் ஸப்தரிஷிகளும் இவர்களேயாவர். முந்தின மந்வந்தரத்தின் ஞாபகத்தின் மேல் இம்மந்வந்தரத்திற்குரிய தர்மத்தை வெளியிட்டபடியால், அதை ஸ்மிருதி யென்றும் ஸ்மார்த்த தர்ம மென்றும் சொல்வோம். முந்திய மந்வந்தரங்களில் தேர்ந்து மிருந்தவர்களால் அறிந்து அநுஷ்டிக்கப்பட்ட தர்மமாகையாலும், இனிவரும் மந்வந்தரங்களிலும் நிலை பெறுமாகையாலும், மூத்தோர்க்கு மூத்தோர் வழியாகவே

வரும் உபதேசமாகையாலும், மிகவும் பூஜிக்கத்தகுந்த
சிஷ்டர்களின் நன்னடக்கையும், நன்மாதிரியுமாகையாலும்
சிஷ்டாசாரமெனக் கூறப்படும். இவ்விதம் மாத்ஸ்ய புராணம்
கூறுகிறது.

மார்க்கண்டேய புராணத்தின் பிரகாரம், அடுத்த
8வது மந்வந்தரத்திற்காக இரண்டாவது மந்வந்தரத்திலே
யே ஸாவர்ணி என்பவர் தமது வேலையை ஆரம்பித்தார்.
உலக விகாஸத்தையே ஆளவேண்டுவோர்க்கு இவ்வளவு
மிகுந்த ஞானமில்லாவிடிற் சாத்தியப்படாது. அதே மாதிரி
சொற்ப ராஜ்யத்தை ஆளுவோர்கள் கூட, ஆத்ம வித்யை
யின் மூலதத்துவங்களை யறியாவிடில், "ஜீவனின் உற்பத்தி
ஸ்தானம் எது, போகுமிடமெது, எப்படியதையடைகிறது,
என்னும் விவரங்களில் ஒன்றுமறியார். மனத்தின் சேஷ்டை
களை யறியாதவன் எவ்விதம் தன் ஹிருதயத்தில் பரிசுத்த
னாயிருக்கக்கூடும்? தன்னிடத்து ஹிருதய பரிசுத்தம் இல்
லாதவன் பிறர் ஹிருதயங்களில் எப்படிப் பரிசுத்தத்தைக்
கற்பிக்க இயலுவான்? தனது வாழ்க்கையின் பிரயோசன
மொன்று மறியாமலும் அதை ஒழுங்குபெற நடத்தத்
தெரியாமலும் இருப்பவன் பிறருடைய வாழ்நாளை நலம்பெ
றச்செய்வதெங்ஙனம்? ஒரு வீட்டை யாளுவதானாலும் சரி,
ஒரு ராஜ்யத்தை யாளுவதனாலும் சரி, அதுமுடியாது. நம்
சோதரரான மனிதஸமூகத்திற்கு உண்மையான உபகாரமி
ன்னதென்றறிந்து அதைச் செய்யமுடியாது. பரமார்த்தமா
ன பயனுக்கேற்றதாய மார்க்கங்களைச் சனங்களுக்கு உணர்
த்தவும் இயலாது. ஸ்தூல இந்திரியங்களுக்குப் புலனாகின்ற
மட்டில்தான் முடிவு இன்னதென்றும் மார்க்கமின்னதென்
றும் உணர்வான். அவ்விந்திரியங்களுக்குங்கூட சக்தி எதி
னின்று வருகிறது என்றறியான். ஆத்மவித்தையைச் சிறிது
மறியாமல் ஜனங்களுக்குத் தலைவராகவும், அரசராகவும்
நடிக்கிறார்களே, அவர்கள் "குருடருக்கு வழிகாட்டும் குரு
டர்" உன்று முண்டகோபநிஷத் கூறுகிறது.

தற்காலத்தில் மநுஷ்யவர்க்கத்தின் நிலைமை இவ்விதமேயுள்ளது. உலகவாழ்க்கை என்ன கருத்தை யுத்தேசித்து நடக்கிறது என்பது அரசனுக்கும் தெரியவில்லை; குடிகளுக்கும் தெரியவில்லை, புரோகிதர்கட்கும் தெரியவில்லை, சாஸ்திரிகட்கும் தெரியவில்லை. பணக்காரரும் ஏழையும், முதலாளியும் தொழிலாளியும் எதற்காக இவ்வுலகவாழ்க்கை என்றெண்ணுகின்றனரா? கிடையாது. உலகவாழ்க்கையை எப்படி நாம் நடத்திவரவேண்டும் என்பதையும் சிறிது பேர்களேதான் அறிந்திருக்கின்றனர். அதிலுங்கூட, இக்கணத்திலுற்ற தொந்தரவை நீக்கிக்கொண்டால் போதுமென்று கருதி அதில் மட்டும் முயற்சிக்கிறார்களேயொழிய சாசுவதமான சுகத்தின் பொருட்டு முயற்சிப்போர் கிடையாது. நமதெண்ணங்களும் யோசனைகளும் அபிப்ராயங்களுமே கடைசியிற் காரியமாகப் பரிணமிக்கின்றன. ஆயினும் கார்ய நிர்வாகத்தில் உயர் லக்ஷ்யங்களும், மனோபாவங்களும் பயன்படாவென்கிறார்கள். இத்தகையாரா மநுஷ்யவர்க்கத்தை சுகமானவழியிற் கொண்டு சேர்ப்பவர்கள்?

மநுவும் அவருடைய ரிஷிகளும் இவ்வித அற்ப திருஷ்டியுடையவர்களல்லர். வெகுகாலத்திற்குப் பிறகு செய்யவேண்டிய விஷயங்களநேகத்தைப்பற்றி இப்போதே தீர்க்காலோசனை செய்வார்கள். தீர்க்கதிருஷ்டியும் தீர்க்காலோசனையுமே அவர்களின் சிறந்த குணங்களாகும். மனிதர்களுடைய ஆசாரணைக்கென்று அவர்கள் விதித்திருக்கும் சட்டதிட்டங்களை உள்ளபடி அறிந்து ஆசரிக்கவேண்டுமானால், உலகம் எப்படி நடக்கிறதென்று நாமறிதல்வேண்டும். ஏனெனில் அதை யநுசரித்தேதான் அவர்கள் சட்டம் விதித்திருக்கிறார்கள். உலகம் எப்படி நடைபெறுகிறதென்பதைப்பற்றி மநு முதலியவர்களின் அபிப்பிராயம் நமக்குத் திருப்தியாயில்லை என்று வைத்துக்கொண்டாலும், அவர்கள் எவ்வபிப்ராயத்தை உண்மையெனக்கொண்டு, எவ்வித ஒழுங்குகளை ஜனங்களுக்கு விதித்திருக்கிறார்கள்

என்றறிவதே நம் கடமையாயிருக்கிறது. ஆசார முறையை யறியுமுன் அதற்காதாரமான ஸித்தாந்தங்களை முதலி லறிந்துகொள்வோம், அவைகளை ஏற்படுத்தி அநுஷ்டித்துக் காட்டியவர்களின் நிலைமையினின்றே நாம் விஷயங்களை யறியவேண்டும்.

இதில்லாததால் தான் மேல்நாட்டாருக்கு நமது ஆசரணைகள் யாவும் அர்த்தமில்லாதவையாகத் தோற்றுகின்றன. "இதென்ன, ஹிந்துக்கள் எல்லாவற்றையும் மதத்தோடு இணைத்து வைத்திருக்கிறார்களே. வியாகரணத்திலும், கணிதசாஸ்திரத்திலுங்கூட, ஸ்வர்க்கம் மோக்ஷம் எனும் பிரஸ்தாபம் வருகின்றதே என வியக்கிறார்கள். அவர்கள் வெளித்தோற்றத்தை மட்டும் கவனிக்கிறார்களே யொழிய உட்கருத்தை கவனிக்கிறார்களில்லை. ஏனெனில் அவர்களுடைய ஆசரணைகளும் கொள்கைகளும், ஹிந்துக்களுடையதைக் காட்டிலும் முற்றிலும் வேறானவைகள். இளம்பருவத்துக்குழந்தைச்கு விளையாட்டில் தான் பிரியம். யௌவன தசையிலுள்ள ஒருவனுக்கு ருசியான விஷயங்கள் வேறு. அக்குழந்தை சிறிதாவது யௌவன விஷயங்களின் இயல்பைக் கிரகிக்கக்கூடுமா? கூடாது. அதேமாதிரி வயோதிகர்களின் சாந்தத்தையும் ஸமாதானத்தையும் யுவாவானவன் அறிகிறானில்லை. ஆனால் மூத்தவர்கள் தமது ஞாபகத்தின் மூலம் இளையவர்களை நேர்மையாய் அறிதல் கூடும். இதேமாதிரிதான் உலகத்திலுள்ள ஜாதியார்களுள்ளும். பூர்விக ஜாதியார்களனைவோரும் பழைய நாகரிகத்தவர்கள். அவர்கள் தற்காலத்தில் மெலிந்திருப்பினும். பச்சிமதேசத்தவர்கள் எவ்வளவு முறுக்காயிருப்பினும் நவீன நாகரீகத்தின் தன்மையையறிவது அவர்கட்குச் சிரமமாகாது. ஏனெனில் சரித்திர பூர்வமாய்த்தாமும் ஓர் காலத்தில் உன்னத பதவியில் இருந்தவர்களாதையால், நவீன நாகரீகத்தின் செல்வச் சிறப்பு முதலிய வைபவங்களின் தன்மை இவ்வளவுதானென்று இலகுவாய் நிர்ணயிப்பார்கள். வாலிபன் ஒருவன் உலகத்தில் சீரும் சிறப்புமாய் வாழுமாறு, முயற்சியுடையவனாகவும், ஊக்கமும் உற்சாகமுடையவனாகவும் இருப்பானென்பது

வயேதிகர் ஒவ்வொருக்கும் அநுபவ மூலமாய்த்தெரிந்த உண்மையே. அதிசக்கிழவனாகிக் கூறுகெட்டவன்தான் அவ்விதம் அறிய இயலான். ஆனால் வாலிபர்களோ உலகத்தில் புதிய புதியஅநுபவங்களைப் பெறுவதிலேயே ஆவலுள்ளவர்களாகப் பிரவிர்த்திக்கிறார்களாகையால், ஓய்வுஒழிவு என்பதின் தன்மையையே உணர இயலார்கள். வைராக்ய தசையையடையாதவர்கள் வைராக்யமுள்ளவர்களின் தன்மையைக் கிரகிக்க முடியாது. இதனால்தான் பச்சிம தேசத்தவர்கள் பிராசீனர்களின் நாகரிகத்தை நேர்மையாய் அறியக்கூடவில்லை.

ஆகையால் உலகத்தில் மனிதர்களும், மநுஷ்ய ஜாதிகளும் இவ்விரு வகையாகப் பிரிக்கப்படல் வேண்டும். "சாதி இரண்டொழிய வேறில்லை" என்று ஒளவையார் பிரித்த வரையறை இதைக் கொண்டேயாம். தற்காலக் கல்வி முறையும், அரசாட்சி முறையும் இவ்விரு வகையினர்க்குத் தக்கவாறு இரு வகையா யிருக்கவேண்டும். அந்தோ! தற்கால அரசர்களும்; கல்விமான்களும் இவ்வுண்மையை அறிகின்றனரில்லையே. அதனால்தான் தற்காலக் கல்விமுறையும், அரசாட்சி முறையும் குறைபாடுள்ளன வென்கிறோம். இந்த ஜன்மத்திற்கு முன் எத்தனையோ ஜன்மங்களிருந்திருக்கின்றன வென்றும், தற்கால நாகரீகத்தைப் போலவே முற்காலங்களிலும் எத்துணையோ பெருமையான பல நாகரீகங்கள் தழைத்திருக்கின்றன வென்றும், அப்பெருமைகளினின்றும் ஒழிந்து, ஆத்மஸம்பத்தையே பெரிதாகத் தேடுகின்ற மனிதர்களும் ஜாதியார்களும் உலகில் உளர் என்றும், தமக்கென்று வாழாமல் பிறர்க்கென்றே வாழுவோர்களால்தான் உலகம் நிலைக்கிறதென்றும், மேல்நாட்டார் கருதுகின்றனரில்லையே.

பிரவிர்த்திமார்க்கம், இன்னது நிவிர்த்திமார்க்கமின்னதென்று அறியாதவர்கள், உலக இயல்பை யறியாதவர்கள், உலகத்தில் இரண்டுவிதமான ஜீவர்களு மிருக்கிறார்கள். இதுதான் மேல்நாட்டாருக்கும் நம்மவர்க்குமுள்ள வித்யாஸம். ஆனாலும் இருவர்க்கும் பொதுத்தன்மையு முள்ளது.

(வரும்)

பி. எஸ். ராமசுப்பையர்.

தேசியக் கல்விச் சிறப்பு.

காப்புச் செய்யுள்.

வெண்பா.

தேசியக் கல்விச் சிறப்புரைக்கச் சின்மயமாய்த்
தேசோ மயமாய்த் திகழீசா! மாசாரும்
சிந்தை யுடைய சிறியேற்கு நல்லறிவு
தந்தருள்க உள்ளம் தழைத்து.

அகவற்பா.

கல்வியின் பெருமை } அலகிலாக் கருணை ஆண்டவன் சிருஷ்டியில்
அலைகடல் சூழும் அம்புவி மீது
பலபல நிறமும் பலபல திறமும்
பலபல நிதியும் பலபல மதியும்
படைத்துள ராகும் பல்வகை மாந்தர்
படிப்படி வேறு பட்டுள ரெனினும்
ஐம்பொறி யுணர்வோ டமையா தறிவெனும்
செம்மைசே ரீசன் திவ்வியாம் சத்தினை
ஆரும் உணர்வா யவரவர் உளத்து
ஏறவோ தாழவோ இயற்கையிற் பெறுவர்.
இந்த அறிவினுக் கிருப்பிட மாகும்
சிந்தையை மாந்தர் செவ்வழி செலுத்தி
மாசார் தீநெறி மறந்தும் நினையாது
ஆசா னுரைப்பதை ஆய்ந்தாய்ந் தறிந்து
ஈஸ்வர பக்தி இன்னருள் வாய்மை
தேசுறு நற்புகழ் திருந்தும் ஆசாரம்
இவை முதல் நன்மைகள் எய்துதல் தானே
புவிமிசைக் கல்வியாப் புகலுவர் மேலோர்.
கல்வியின் பெருமையோ கணக்கிட அரிது
பல்விதம் பகரினும் பகர்தற் பாலதோ?
கல்வியே அறமாம்; கல்வியே பொருளாம்;
கல்வியே இன்பம்; கல்வியே வீடு.
கற்றோர் தாமே கண்ணுடை யவர்கள்;

மற்றோர் முகத்து வந்தவை புண்ணே.
கலைவலார் மதிநலம் காசினி முழுதும்
கலைநிறை மதியெனக் காண்போர்க் கெல்லாம்
இன்பமும் கிளர்ச்சியும் இனிதின் அளிக்கும்.
என்பல கூறுதல்? இவ்வுல கின்கண்
ஆதி நாளமுதல் அரும் புகழ் தொகுத்தே
பூதல உடலம் போயின பின்னும்
என்றும் நிலையாய் இலங்குவோர் யாவர்
என்றே நாமின் றெண்ணு மிடத்து,
வால்மீகி வியாசர் வர கம்பர் ஔவை
போல் மேவு புண்ணியப் புலவரே யன்றோ?
வேறுள பாரும் வீரரை வேந்தரைக்
கூறுவது மதிக் குறைவே யாகும்.

நொண்டிச் சிந்து.

பண்டை இந்தியாவிற் கல்வியின் நிலைமை

இப்படிச் சிறப்புடைய—கல்வியில்
இந்தியா மிகவும் முந்தி யிருந்த
தென்பதை உலகறியும்;—எனினும்
ஒருசில விவரம் உரை செய்தால்
உபயோக மேயாகும்:—வேத
சாஸ்திர நூல்கள், ஈசன் ஸ்தோத்திர நூல்கள்.
சாத்விக குணம் விளக்க—அரிய
நீதி நூல்கள் பலபோத நூல்கள்
நிகரில் தத்துவ நூல்கள்—இன்னும்
கற்பனை யலங்காரம் பொற்புறக்கொண்டு
கதை நயம் உயர் நீதி—முதலாம்
சொற் பொருள் நயங்கள் பற்பலசேரும்
சுவை மிகு காவிய நூல்கள்—இதி
காச புராணங்கள் மாசிலாச் சிற்பம்
கணிதம் ஜோதிஷம் வைத்யம்—இவைபோல்
கலைபல வற்றை மலைவிளக்காக்
காட்டும் பலநூல்கள்—வேறு

நாட்டார் காட்டு முரட்டரென
நாட்டும் படியிருந்த—ஆதி
கால முதலா நமது சில நாட்டில்
கன ரிஷி முதலோரால்—நல்ல
குரு சிஷ்ய முறையில் பரம்பரையாய்க்
கூறிவைத் திவை கோடி.

கும்மி மெட்டு.

இந்தியக் கல்வியின் தற்கால நிலைமை

இப்படிப் பற்பல வித்தை மலிந்து
இந்தியா முன்னாள் செழித்திருக்க
இடையிற் பற்பல மகமதியர்கள்
இந்நாட்டிற் புகுந்தாண்டார்கள்.
இந்த இடையிட்ட காலத்திலே நல்ல
இந்தியக் கல்வியும் தர்மங்களும்
மதத் துவேஷத் துடன் உட்கலகங்களால்
மங்குதலுற்றன கொஞ்சம் கொஞ்சம்.
இவர்க்குப் பின் வந்த ஐரோப் பியர்களில்
இங்கிலீஷ்காரர் கை ஏற்றமுற்று
இந்தியாவை இப்போ தாள்வதில் நமக்கு
எய்திடு நன்மை பலவு முண்டு.
அந்த நன்மைகளில் ஒன்றெனவே நாம்
ஆங்கிலக் கல்வியைக் கூறி டலாப்;
ஆங்கிலத் தாலே தன்மறுப் பொற்றுமை
அறிவு விசாலம் அடைகின் றோம்;
ஆயினும் இந்தியர் முப்பத்தைந்து கோடி
ஆனவர்க் கெல்லாம் துரைத்தனத் தார்
ஆங்கிலக் கல்வி பயிற்றுதல் என்பது
அசாத்தியத் தோடனு வசிய முமாம்.
மேலும் கவனித்துப் பார்க்கில் நமது
மேலாம் கவண்மெண்டார் எல்லார்க்கும்
பொதுவாய்ப் புத்திக் குரியகல் வியொன்றே
புரிந்து வருதல் சாத்தியமாம்.
அதற்கும் ராஜாங்கத்தார் அரசிறைப் பொருளில்
அதிகம் செலவிடல் ஆகாது;

ஏனெனிற் காவல் மராமத் சுகாதாரம்
இவை பிற வற்றுக் கும் பொருள் வேண்டும்.
ஆதலால் கல்வி விஷயமாக நம்
அரசாங்கத்தார் செய்வதெல்லாம்
இந்திய ஜனத் தொகைக் கீடு நோக்கில் அது
என்றைக்கும் போதாமல் தானிருக்கும்.
அன்றியும் கல்விக் கனுகூலங்கள் நம்
அரசாங்கத்தார் செய்தாலும்
ஆசாரம் பாஷை அனுஷ்டானம் மதம்
ஆன இவை வித்தியாசத்தினால்
நம்முடைய இந்திய நாட்டுக் கிசைந்த
நலம் முழுவதும் நண்ணாது.
ஆகையால் இந்தியக் கல்வி சிறக்க
ஆசையோ டிந்திய புத்திரர்காள்!
வேண்டும் பணம் மிகச் சேகரித்துத்தக்க
விற்பன்னர் தம்முடன் யோசித்து,
தேசீய வித்தைநம் தேசமெங்கும் வெகு
தேஜஸ் ஸுடனே பரவி வர
ஆனமுயற்சிகள் அறிஞர்கள் பற்பலர்
ஆழ்ந்து நினைந்து சொல்லும் வண்ணம்
ஆத்திரத் தோடு நாம் செய் திடுவோமாகில்
அடியிற் கண்ட பலன்கள் உண்டாம்.

ஆனந்தக் களிப்பு.

தேசீயக் கல்வியின் பயன்

தேசீயக் கல்வியால் நாளும் நமது
செல்வம் வர்த்தகத்துடன் சேர்ந்தென் றும் [நீளும்;
தொழில்கள் பற்பல கொழிக்கும்;—நாட்டின்
தொன்மை வளமெலாம் தோன்றிச் செழிக்கும்
நாடெங்கும் அஞ்ஞானம் நீங்கும்;—தூய
நல்லவ ரிடமபி மானமே ஓங்கும்,
ஒத்துழைப் பென்பது கூடும்;இப்போது

உள்ள துவேஷங்கள் ஊரை விட்டோடும்;
கல்விக்குச் செலவு குறையும்;—வெறும்
காசுக் கென்றுழைத் திடும் ஆசையும் மறையும்;
தேசாபிமானம் சொலிக்கும்;—என்றும்
சிறுமைசேர் தன்னயப் பேயும் ஒளிக்கும்;
தாய் பாஷைக்கும் நல்ல காலம்;—மேலும்
தலமெங்கும் ஓங்கும் நற் புண்ணிய சீலம்
சொற்பவர விருந் தாலும்;—தோன்றும்
தூய கருத்தே உளத்திலெக் காலும்;
நீச புத்திமிக மங்கும்;—நிஜ
ராஜ பக்தி மேலும் நலமுறப் பொங்கும்;
ஈசவிஸ் வாசம் இலங்கும்;—எங்கும்
நேசம் பெருகிடும்; நேர்மை துலங்கும்;
இந்திய மாதாவின் கீர்த்தி—வளர
மைந்தர்கள் நாமிது செய்வதே நேர்த்தி;
அருமையாம் தேசீய வித்தை—இதனை
ஆதரிப்பதில் வேண்டும் உள்ளத்தில் சிரத்தை;
இந்த நன் முயற்சிக்கே உதவி—செய்பவர்க்
கிந்து மாதேவி அருள்வள் நற்பதவி.

ஆனந்தக் களிப்பு.

மங்கல வாழ்த்து } வாழிதேசீய வித்தையே—நாட்டில்
வாழி யிதனால் வளம்பல மெய்யே
வாழிநம் மிந்தியா வாழி—நாளும்
வாழி யன்னை புகழ் வழி வழி ஊழி.
வாழிநம் ஜார்ஜ் மன் வாழி—மிக
வாழி அவர் செங்கோல் மேல் மேலும் வாழி
வாழிசர் வேல்ஸ் வரன் கருணை—என்றைக்கும்
வாழிநம் முள்ளத்தில் அவன் நாம ஸ்மரணை.

வே. முத்துஸாமி ஐயர் எம். ஏ., எல். டி.,
மதுரை.

பிரஹ்மக்ஞான தரிசனம். (பாலபாடம்.)

அத்தியாயம். 29.

இயற்கையாய் அமைந்துள்ள லோகங்கள். (தொடர்ச்சி.)

ஒரு எண்ணத்தைப்பற்றி மேலான எண்ணமென்றும் கீழான எண்ணமென்றும் நாம்சொல்லும்போது 'மேல்' 'கீழ்' என்றவார்த்தைகளை எந்த அர்த்தத்தில் உபயோகிக்கிறோமோ அதே அர்த்தத்தில் மேல் லோகம் கீழ்லோக மென்பதையும் உபயோகிக்கிறோமென்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். அமெரிக்கா விலுள்ள சில மலைகளில் நீலம், மஞ்சள், சிகப்பு வர்ணங்களுள்ள பாறைகள் அடுக்கடுக்காயிருப்பதுபோல் லோகங்கள் ஒன்றின் பேரில் ஒன்றாக யிருப்பதாய் எண்ணக்கூடாது. ஆனால் சிலலோகங்கள் மற்றவைகளைவிட அதிக மேன்மையும் தெய்வத்தன்மையும் பொருந்தினவைகளாயிருக்கின்றன.

கடவுள் நமக்கு மேலேயிருப்பதாகச் சொல்லுகிறோம். ஆனால் அவர் நமக்குள்ளேயும் ஒவ்வொரு வஸ்துவிலும் அந்தர்யா மியாயு மிருக்கிறார்.

இந்தலோகங்களைப்பற்றி நாம் மிகவும் அதிகமாய் கற்றுக்கொள்ளவேண்டி யிருக்கிறது. ஆனால் இந்த லோகங்களில் மூன்றில் மாத்திரம் நமக்கு அதிக சம்பந்த மிருப்பதால் அவைகளைப்பற்றி நாம் அதிககாலம் செலவழித்து கற்றுக்கொள்வோம். கீழான வைகளென்று சொல்லப்படுகிற அந்த மூன்று லோகங்களில்தான் மானிட விகாச முறை நடை பெருகின்றது. அதினாற்றான் அந்த மூன்று லோக திரவியங்களால் நம்முடைய மூன்று சரீரங்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மேலே சொன்ன ஏழுலோகங்களில் ஒவ்வொன்றிலும் ஏழு உட்பிரிவுகளுண்டு. அவைகள் ஒவ்வொன்றிலும் அததன் லோகத்துக்குரிய நுட்பமானது முதல் பருப்படி

யானது வரையுள்ள திரவியங்களிருக்கின்றன. இரண்டு லோகங்களில்—அதாவது—மானசலோகத்திலும் பூலோகத்திலும் மேற்பாதி, கீழ்பாதி யென்று சொல்லப்பட்ட இரண்டு பிரிவுகளுண்டு. ஆனால் பற்பல வர்ணப்பாளைகளுக்கு மத்தியில் வரம்புகளிருப்பதுபொல மேற்சொன்ன பிரிவுகளுக்கு மத்தியில் ஒருசுவராவது இடைவெளியாவது இல்லை. அந்தப்பிரிவானது அனேகமாய் வானவில்லிற்றோன்றுகிற வர்ணங்களுக் கொப்பாய்ச் சொல்லலாம். அதில் சிகப்பு, ஊதா, மஞ்சள் முதலான வர்ணங்களைத் தெளிவாய்ப் பார்க்கிறோம். ஆனால் எந்த இடத்தில் ஒரு வர்ணம் முடிகிறது, வேறொன்று எங்கே ஆரம்பிக்கிறது என்று சொல்லுவது மிகவும் கடினம். நமக்குத் தெரிகிறதெல்லாம் கொஞ்ச தூரத்துக்கப்பால் சிகப்பு மறைந்து ஊதாதோன்றுகிறதென்பதும் அப்பால் கொஞ்ச தூரத்தில் ஊதா மறைந்து மஞ்சளும் அப்பால் பச்சை நீலம் இந்திர நீலம் முதலான வர்ணங்கள் தோன்றுவதுமே.

மானசலோகத்தின் மேல்பாகம் மகர்லோக மெனப்படுகிறது. இவ்விடத்திற்றான் நம்முடைய காரண சரீரங்களிருக்கின்றன. ஒரு ஜன்மத்துக்கும் மற்றொரு ஜன்மத்துக்கும் இடையில் நாம் சுவர்க்க போகத்தை யனுபவிப்பது இந்தலோகத்திலேதான். மானச லோகத்தின் கீழ்பாகத்தில் நம்முடைய மானச சரீரங்களை உபயோகிக்கிறோம். நாம் தெளிவானதும் வியக்தமானதுமான எண்ணங்களை உபயோகித்து வந்தால் அச்சரீரங்கள் வெகு அழகுள்ளவைகளாயிருக்கும்.

பூலோகத்தின் மேன்மையான பாகம் ஆகாய திரவியத்தால் அமைக்கப்பட்டிருக்கிறது. அதிலிருந்து நம்முடைய பிராண சரீரம் உண்டாக்கப் பட்டிருக்கிறது. உண்மையாய் அது ஒரு சரீரமல்ல. ஆனால் அது ஸ்தூல சரீரத்தின் உருவத்துக்கொப்பாய் ஆவிபோன்ற ஊதா நரை வர்ணமுள்ளது. இதைப்பற்றி முன் ஒரு அத்தியாயத்தில் விவரமாய் சொல்லியிருக்கிறோம்.

பூலோகத்தின் பரும்படியான அல்லது கீழானபாகம் பிருதிவி, அப்பு, வாயு வாகிய மூன்று திராவியங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. பூலோகத்தின் மேன்மையான பாகமானது நான்குவித ஆகாய திரவியங்களால் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பூலோக மானது ஏழுவித திரவியங்களால் அமைக்கப்பட்ட ஏழுவித உட்பிரிவுள்ள தாயிருக்கிறது.

நம்முடைய ஸ்தூல சரீரம் இதற்கு ஒற்றுமையுள்ளதாயிருக்கிறது. அதாவது பிருதிவி, அப்பு, வாயு வினல் அமைக்கப்பட்ட மாம்சம் எலும்பு இரத்தம் முதலானவைகள் சேர்ந்த ஸ்தூல சரீரமும் ஆகாய திரவியங்களால் அமைக்கப்பட்ட பிராண சரீர முமாக இரண்டு பிரிவினை யுடைத்தாயிருக்கிறது. பிராண சரீரமானது முன்னமே சொல்லியிருக்கிறபடி உணர்ச்சியையும் பிராண சக்தியையும் ஸ்தூல சரீரத்துக்கு ஊட்டுகிற கருவியாயிருக்கிறது.

வி. வெங்குசாமி ஐயர்

புத்தக விமர்சம்

சந்திரகுப்த சக்ரவர்த்தி சரித்திரம்:—ஆசிரியர் வ. வெ. ஸு. அய்யர் விலே அணா 6. முத்திரா ராக்ஷஸக்கதையை அனுபந்தமாகத் தொகுத்துளது. நமது வாலிபர்களும் மாணவர் மாணவிகளும் நமது புராதனப்புண்ணிய புருஷர்களுடைய மேன்மையையும் நம்முடைய பிராசீன நாகரீகத்தின் பெருமையையும், அரசாளும் முறைகளில் பெற்றிருந்த தேர்ச்சியையும், அறியவேண்டியது தற்காலத்தில் மிகவும் முக்கியமாயிருக்கிறது. ஆகையால் இப்புத்தகமானது மிகவும் பிரயோஜனகரமானது. இதை நமது பள்ளிக்கூடங்களில் மாணவர் மாணவிகள் வாசித்துப் பயன் பெறுவார்களாக.

ஜீவகாருண்யம்.

கொல்லாவிரதமொன்று குவலயமெலாமோங்க
எல்லார்க்குஞ் சொல்லுவதென் இச்சை பராபரமே.

திருவும் செல்வமும் ஒருங்கே அமையப்பெற்ற பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரை யம்பதிக்குத் தென்பால் வில்வவன க்ஷேத்திரம் என்றும், திருநல்லூரென்றும், அருப்புக்கோட்டை என்றும் பல திருநாமங்களைப் பெற்றதும் கைலையப்பதியாகிய சிவபெருமானும் அம்பிகையும் ன்முதலிங்கேசுவரர், அமுதவல்லியம்மை என்னும் திருநாமத்துடன் எழுந்தருளியுள்ள சிவாலயம் அமையப்பெற்றதுமான ஓர் நகரமுள்ளது.

அவ்வாலயமானது க்ஷத்திரியகுல நாடார்களுக்குச் சொந்தமானது. அவ்வாலயத்தின் பிரகாரத்தில் சின்னாள்களுக்குமுன் மாசிமாசத்துப் பௌரணை திதியும் சோமவாரமுங்கூடிய ஓர் சுபதினத்தில் சாயங்காலத்தில் மந்தமாருதம் வீசிக்கொண்டிருக்க சூரியகிரணங்கள் அங்குள்ள மரங்களின் பசிய தளைகளில் பரப்பப்பட்டு மனதுக்குப் பரமானந்தத்தைத் தந்துகொண்டிருந்த சமயத்தில் இராமானந்த யோகி என்னும் ஓர் மகான் அடியில்க்கண்ட விதம் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தார்.

சகோதரர்களே! சகோதரிகளே!

இன்று மாசி மாசத்து பௌரணையும் சோமவாரமும் சேர்ந்த மஹாபுண்ணியதினத்தில் ஸ்திரீகளும் புருஷர்களுமாகிய நீங்களெல்லோரும் அமுதவல்லியம்பாள் சமேதராய் எழுந்தருளிய சிவபெருமானை வணங்குவதற்கு கூட்டம் கூட்டமாய் வருகிறதைக்கண்டு ஆனந்த பரவசனாகிய நான் உங்களுக்கு ஜீவகாருண்யத்தைப்பற்றி சிலவார்த்தைகள் சொல்லவேண்டுமென்று விருப்பம் உண்டாகிறது. ஏனென்றால், உலகத்திலே பாவங்களில் முதல் வைத்தெண்ணப்பட்டது கொலை. அப்பேர்ப்பட்டகொடிய பாவத்தை எந்த மனிதரும் செய்யக்கூடாதென்றே பரமேச

வரர் ஆணையிட்டிருக்கிறார். அந்த ஆணையைக்கடந்து அநேக ஜனங்கள் ஆடு, கோழி, மீன் முதலியபிராணிகளைக் கொலைசெய்து தங்கள் புழுக்குரம்பையாகிய சரீரம் பெருக்க உண்டு மகிழும் காட்சியைக்காண என் உடல் நடுங்குகிறது. உலகத்தில் மனிதராய்ப் பிறத்தலரிது. அநேக ஜன்மங்களில் செய்துவந்த புண்ணியங்களே ஒரு ஜீவனுக்கு மானிட சரீரம் கிடைக்கக் காரணமாயிருக்கிறது அதை அறியாமல் மனிதர்கள் தங்களுடைய உணவின் நிமித்தம், நம்மைப்போன்ற ஜீவர்களுக்கு அவரவர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்குத்தக்க விதமாய் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட சரீரங்களை கொலைசெய்து புசிப்பது எவ்வளவு மதியீனம். கடவுள் உங்களுக்கு மானிட சரீரம் கொடுத்தது இப்பேர்ப்பட்ட கொடிய பாவங்களைச் செய்து நரகத்தில் விழவென்று நினைக்கிறீர்கள்? ஒரு நாளுமில்லை. வாயினால் வாழ்த்தவும், மனத்தால் நினைக்கவும், கண்ணால் அவனது திருமேனியைக்கண்டு தரிசிக்கவும், காதால் அவன் புகழைக்கேட்கவும், கையால் வணங்கவும், சரீரத்தால் அவனது அருட் பிரகாசத்தில் தங்கி நிற்கும் சகலஜீவராசிகளுக்கும் வேண்டுவதறிந்து உபசாரஞ்செய்யவு மன்றோ?

எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும் இலக்கும் உயிர்
உடல் அனைத்தும் மீசன்கோயில்
எவ்வுயிரும் எம் உயிர்போல் என்று நோக்கி இரங்காது
கொன்று அருந்தும் இழிவினோரை
எவ்வி யமதூதர் அரும் தண்டஞ்செய்து வல் இரும்பை
உருக்கி அவர் வாயில் வார்த்து
வெவ்விய தீயெழும் நரகில் வீழ்த்தி மாறா வேதனை
செய்திடுவரென வோது நூலே.

என்று மகான்களால் சொல்லப்பட்டிருக்கிறதைநினைத்துப் பார்த்தீர்களா? எந்தச் சரீரமும் மீசன் குடியிருக்கும் கோயில்களல்லவா? எல்லா வுயிரும் பரமேசுவரன் சந்நிதியில் ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்களல்லவா? எல்லாவுயிர்களும் உங்களைப்போல நன்மை தீமைகளை அனுபவித்துக்கொண்டு உலகத்தில் வாழ்வதை நீங்கள்

காணவில்லையா? உங்களைப்போல உங்களால் கொன்று தின்னப்படுகிற பிராணிகளும குழந்தை குட்டிகளை வளர்ப்பதை ஒரு நாளாவது நீங்கள் கவனிக்கவில்லையா? உங்கள் கால் இடறி அதிலொழுகும் ரத்தத்தைக் கண்டவுடன் உங்கள் மனம் என்ன பாடுபடுகிறது! எத்தனை மருந்து போடுகிறீர்கள். உங்களுக்கும் உங்கள் குழந்தைகளுக்கும் வியாதிகள் வந்தால் தடுப்பதற்காக, பலபசுந்தழையும் தின்று பால் கொடுப்பதும், உங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள் விளை நிலங்களுக்கு உரங் கொடுத்துக்கொண்டு வருகிறதுமான ஆடுகளையும், விஷப்பூச்சிகளால் நீங்கள் வியாதிப்பட்டு துன்பமடையாமல் விஷப்பூச்சிகளையும் நீங்கள் கழிவு படுத்திய அற்ப உணவுகளையும் புசித்து உங்களுக்கு ஒத்தாசை செய்கிற கோழி முதலிய பறவைகளையும், நீங்கள் ஸ்நானஞ்செய்தல், குடித்தல் முதலியவைகளுக்கு உபயோகப்படுத்துகிற நீர் நிலையில் உங்களுக்குக் கெடுதியாக உற்பவிக்கும் விஷக்கிருமிகளையும் அழுக்குகளையும் புசித்து உங்களுக்கு உதவி செய்கிற மீன்களையும், பிடித்துக் கொலைசெய்து உங்களுடைய வயிற்றை நிரப்பிக்கொண்டு வருவீர்களாகில், எமபடர், நீங்கள் உங்களைப்போன்ற ஜீவர்களிடத்தில் காருண்யமில்லாமல் வயிற்றைப் பெரிதாய் நினைத்ததற்காக வலிய இரும்பை உருக்கி வாயில் வார்த்து வெப்பந்தரக்கூடிய அக்கினியில் தள்ளி நீங்காத நரகவேதனை செய்திடுவார்களென்றதைச் சிந்தித்துப் பார்க்கலாகாதா?

(இன்னும் வரும்.)

இராமானந்தயோகிகள்.

சர்வதேள் விஷ சஞ்சீவி

கதறி வந்தவன் களிப்புடன் செல்வான்!"

"விஷம் தீண்டினவன் நிமிஷத்தில் குணமடைவான்!"

குணமில்லாவிட்டால் ரூ. 100 இனாம் கொடுக்கப்படும்.

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டு விசனமுற நேரிடுவதைப் பற்றி, நாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டு பிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைத் தேள்கொட்டின விடத்தில் உபயோகித்த உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ் விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுத்தெறுக்கால் முதலிய எவ்வித விஷ ஜெந்துக்கள் தீண்டினாலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குணமடையலாம். மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபஸ் செய்து விடப்படும்.

இந்த சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ் விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டியது. ஏனென்றால், மனிதனை இரவில் 12மணிக்கு நித்திரையில் விஷர் தீண்டி விட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தை பட அநேகமருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன் படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. அடியிற் கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

விலை பாக்கட் 1-க்கு 0—8—0

டசன் 1-க்கு 5—0—0

விலாசம்

வி. ஏ. எஸ் பாணி,

நெ. 3. இருளப்பன் தெரு, மதராஸ்.

காலரா மாத்திரைகள்.

இம்மாத்திரைகள் விஷபேதி வராமல் தடுக்கும் வந்தபின்னும் குணப்படுத்தும் ஒவ்வொரு வீட்டிலும் இம்மாத்திரை டப்பி ஒன்றிருக்கவேண்டிய தவசியம். அதிசாரம், சீதபேதி, அக்னிமந்தம், இவைபோன்ற அஜீரணத்தால் வரும் குடலைப் பற்றிய வியாதிகளெல்லாம் இம்மாத்திரைகளால் குணப்படுவது நிச்சயம். காலரா வாந்திபேதி கேசுகளில் இம்மருந்து அற்புதமான வேலை செய்கிறது.

80 மாத்திரை கொண்ட டப்பி 1க்கு ரூ 1.

வைத்திய சாஸ்திரி

மணீசங்கர் கோவிந்தஜீ,

ஆதங்கநிக்ரஹ ஔஷதாலயம்,

45, மேலக்கோபுர வீதி, மதுரை.